

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.7.2024) முகாம் அலுவலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், ஹார்வார்ட் மருத்துவப் பள்ளி, புளூம்பெர்க் பொது மருத்துவப்பள்ளி போன்ற பல்வேறு மருத்துவப் பள்ளிகளில் தமிழ்நாடு அரசின் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் பற்றி விளக்கவுரை அளிக்க அமெரிக்க நாட்டிற்கு செல்லவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் கே. நாராயணசாமி ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.7.2024) தலைமைச் செயலகத்தில், ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் பிரான்ஸ் நாட்டில் நடைபெறவுள்ள பாரீஸ் ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள தேர்வாகியுள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த 5 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்வதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்காக சிறப்பு ஊக்கத்தொகையாக தலா 7 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 35 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.7.2024) முகாம் அலுவலகத்தில், மதுரை, தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனையில் நிர்வாக அலுவலராக சிறப்பாக பணியாற்றி 30.6.2024 அன்று ஓய்வு பெற்ற மருத்துவர் காந்திமதிநாதன் அவர்கள் குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றதோடு, உலக மருத்துவர்கள் நாளையொட்டி தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் இன்றையதினம் நடைபெறவுள்ள விழாவில் தனக்கு சிறந்த மருத்துவருக்கான விருது வழங்கப்படவுள்ளதையொட்டியும் வாழ்த்துப் பெற்றார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது முகாம் அலுவலகத்தில் ஹஜ் பயணம் சென்று திரும்பிய தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## 3 குற்றவியல் சட்டங்கள் அமல்!

# புதிய குற்றவியல் சட்டங்களை ஒத்திவைக்க வேண்டும்!

### டெல்லி பார் கவுன்சில், ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவிற்கு கடிதம்!

புதுடெல்லி, ஜுலை 2 - கடும் எதிர்ப்பையும் மீறி ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவந்த 3 புதிய குற்றவியல் சட்டங்களும் அமலுக்கு வந்துள்ள நிலையில், இந்த சட்டங்களை ஒத்திவைக்குமாறு டெல்லி பார் கவுன்சில் ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவிற்கு கடிதம் எழுதி உள்ளது. ஒன்றிய அரசின் 3 புதிய குற்றவியல் சட்டங்களில் ஏராளமான பிற்போக்கு விதிகள் உள்ளதாக முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.

இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய சாட்சியங்கள் சட்டம் ஆகிய சட்டங்களுக்குப் பதிலாக பாரதிய நியாய சன்ஹிதா பிஎன்எஸ், பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, பாரதிய சாட்சிய அதினியம் ஆகிய 3 புதிய குற்றவியல் சட்டங்கள் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரின்போது எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இந்த புதிய சட்டங்களுக்கான மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் இந்த சட்டங்களுக்கு, குடியரசு தலைவர் ஒப்புதல் அளித்த பிறகு அரசிதழில் வெளியானது. 3 புதிய குற்றவியல் சட்டங்களும் நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளன. இந்நிலையில் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட புதிய குற்றவியல் சட்டங்களை ஒத்திவைக்குமாறு, உள்துறை அமைச்சர் அமித்ஷாவிற்கு டெல்லி பார்கவுன்சில் சார்பில் வழக்கறிஞர்கள் கடிதம் எழுதி உள்ளனர்.


